Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU




போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மார்கழி 16 ஆம் நாள் ஷஃபான் பிறை 25 30 12 புதன்கிழமை 321

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும்

# மாண்டவர் தொகை நானூறை தாண்டியது!

## சத்தியாக்கிரக வழக்கு இன்று விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக் கட்சி எம் பி க்கள் நால்வர் மீதும் ஒரு புரக்டர் மீதும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட சத்தியாக்கிரக வழக்கு இன்று புதன் கிழமை காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. டி' ஜெ ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

நான்கு எம். பி க்களில் ஒருவரான திரு. வி, ஏ. கந்தையா காலமாகிவிட்டார். இப்பொழுது திரு. அ அமிர்தலிங்கம், டாக்டர் ஈ. எம், வி. நாகநாதன், வி. தர்மலிங்கம், புரக்டர் எஸ், நடராசா ஆகியோர்மீது 961-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபரைத் தமது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகவும் சட்ட விரோதமாகக் கூடியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முன்னர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இடைநடுவில் அட்டர்னி ஜெனரலின் ஆலோசனைமீது கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இதை ஆட்சேபித்து எதிரிகள் சுப்ரீம் கோர்ட்டில் மனுத் தாக்கல் செய்திருந்தனர், இந்த மனுவை விசாரித்த நீதியரசர் திரு. பி ஸ்ரீஸ்கந்தராஜா வழக்கை மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு அனுப்ப அனுமதித்தார்,

## நெற்பயிர் அழிவினுல் 1 கோடி 80 லட்சம் நஷ்டம்

### மீன்பிடி வள்ளங்களால் 60 லட்சம்; வெங்காயம் 50 லட்சம்; வாழை 25லட்சம்

#### அரசாங்க அதிபர் தரும் விபரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சூறுவளியினுல் மாண்டவர் தொகை இப்பொழுது நானூறையும் தாண்டிவிட்டதாக அரசாங்க அதிபருக்கு கடைசியாகக் கிடைத்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாய் பயிரழிவினுல் நஷ்டமேற்பட்டுள்ளது. இவ்வருட 21 லட்சம் புசல் நெல் அறுவடையாகுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் இப்பொழுது ஐந்து லட்சம் புசல் நெல்தான் அறுவடையாகும்.

180 மோட்டார் இயந்திர மீன்பிடிவள்ளங்கள் இழந்துபோய்விட்டன இதப் படகுகளினுல் 60 லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது. வெங்காயப் பயிர் அழிந்ததால் ஐம்பது லட்சம் ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது. வாழை மரங்கள் அழிந்ததால் இருபத்தைந்து லட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளது சூறுவளியினுல் நஷ்டமடைந்த வீடுகளுக்கு உடனடியாக பத்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படவேண்டியுள்ளது. இதனுடன் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு தற்காலிக மாதாந்தப் படியாக இரண்டு லட்சம் ரூபாய் வழங்கவேண்டியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

சூறுவளி சேதம்

## வாணிபஅவதான நிலையம்மீது எஸ். ஜே. வி. புகார்

### உடன் விசாரணை நடத்த அரசாங்கம் உத்தரவு

கொழும்பு, திங்கள்

சூறுவளி வீசிய தினத்தன்று கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களுக்கு புயல் சம்பந்தமாக எதுவித முன்னெச்சரிக்கையும் கொடுக்காதது குறித்துஉடன் விசாரணையொன்றை நடத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தமிழரசுகட்சி தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் வாணிப அவதானப் பகுதி டைரக்டருக்கு தந்திமூலம் செய்த

(6-ம் பக்கம் பார்க்க)

பிளாஸா தேயிலை

பாவிப்பாளர்களுக்கு !

ரூபா 15,000

( 283 பரிசுகள் காத்திருக்கின்றன )

போட்டியில் பங்குபெற இன்றே முந்துங்கள்.
விபரங்களுக்கு உங்கள் வியாபாரிகளைக் கேளுங்கள்.

பிளாஸா தேயிலை விலையில் மலிவானது,
தரத்திலும் குணத்திலும் உயர்வானது,
தேயிலை தரம் உருசிபார்க்கும்
நிபுணர்களால் பரிசோதித்து அடைக்கப்பட்டது.
இன்றே வாங்கிப் பருகி ஆனந்தமடையுங்கள்.

## கவர்னர்ஜெனரல் நன்கொடை

கொழும்பு, செவ்.

அரசாங்க சூறுவளி நிதிக்கு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ ரூ. 2,000 நன்கொடை வழங்கியுள்ளார்

இந்திய செஞ்சிலுவை சங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான துணிகளை வழங்கியுள்ளது.

அரசாங்க சூறுவளி நிதிக்கு இதுவரை 78,000 ரூபாய் சேர்ந்திருக்கிறது.

## இலங்கை - இந்திய டெலிபோன் தொடர்பு

புதுடில்லி, டிச. 29

இந்தியாவுக்கும் இலங்கைக்கு மிடையே டெலிபோன் தொடர்பு சேவைகள் இன்னும் சீராகவில்லை, அவசர செய்திகள்மட்டும் ஒரு நாட்டிலிருந்து மற்றைய நாட்டுக்கு வானெலி டெலிபோன் இணைப்பு சேவை மூலம் நடைபெறுகின்றது.

## மன்னர் பாலம்

கொழும்பு, செவ்

ஐந்து இடங்களில் உடைந்து போன மன்னர்ப் பாலத்தை திருத்துவதற்கு இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

'ஈழநாடு'

## சூறுவளி கஷ்ட நிவாரண நிதி

சூறுவளியின் கோரத் தாண்டவத்தினுல் பாதிக்கப்பட்டு ஓரிரநாளில் உற்றார் உறவினரையும், உடைமைகளையும் இழந்துநிற்கும் மக்களுக்கு உதவி புரிய "ஈழநாடு" ஆரம்பித்துள்ள 'சூறுவளி கஷ்ட நிவாரண நிதி'க்கு தர்ம சிந்தையுள்ள அன்பர்கள் நிதி உதவியுள்ளனர். காரைநகரைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை என்னும் அன்பர் நேற்று முற்பகல் ஈழநாடு காரியாலயத்துக்கு வந்து 250 ரூபாய்க்கான ஐக்கிய லாபநிதிக் காசோலையைத் தந்ததுடன் சூறுவளியினுல் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்குத் தமது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டார். இந்நிதிக்கு உதவ விரும்பும் அன்பர்கள் தங்கள் நன்கொடையை

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு" த. பெ. 49, யாழ்ப்பாணம்,

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்களை அவ்வப்போது பத்திரிகையில் வெளியிடுவோம்.

| | |
|---|---|
| முன்னர் கிடைத்த தொகை: ரூபா | 685-00 |
| நேற்று நிதியளித்தவர் விபரம் வருமாறு: | |
| சி. ஆ. கணபதிப்பிள்ளை, தங்கோடை, காரைநகர் | 250-00 |
| ஒட்டோஸ் லிமிற்றட், யாழ்ப்பாணம் | 100-00 |
| புளூரிபன் ஹொட்டல் கம்பனி, யாழ்ப்பாணம் | 100-00 |
| டிலகா ஐஸ் கம்பனி, யாழ்ப்பாணம் | 100-00 |
| ஜெரும்றநி பிறின்றிங் டிறேட்ஸ், யாழ்ப்பாணம் | 51-00 |
| க. கணபதிப்பிள்ளை, தீர்த்தக்கரைவீதி, காரைநகர் | 10-00 |
| வி. கணபதிப்பிள்ளை, யாழ்ப்பாணம் | 5-00 |
| க. இராமலிங்கம் வைத்தியர், இணுவில் | 10-00 |
| ஓர் அன்பர் | 10-00 |
| மகாத்மா காந்தி, புத்தகசாலை, யாழ்ப்பாணம் | 10-00 |
| வைத்தியர் கே. எஸ். பரிபூரணனந்தர், நல்லூர் | 25-00 |
| ஸ்ரீமுருகன் ஸ்டோர்ஸ், யாழ்ப்பாணம் | 11-00 |

(2-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

பட்டினி கிடந்து சோம்பி இருக்கும் மக்கள் முன் வேலையாகவும் வேலைமூலம் உணவு அளிப்பதாக உறுதி கூறும் வகையிலேயும்தான் கடவுள் தோன்றத் துணிவார்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 16 உ (30-12-64)


## வைத்திய உதவி

ஆபத்துச் சமயத்தில் சுறுசுறுப்புடன் காரியங்கள் செய்து உதவியளிப்பதுதான் அறிவுடைமை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூருவளி பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதும் பல உயிர்களைப் பலி கொண்டுள்ளதென்பதும் உண்மை. கால்நடைகள் பல சூருவளியினுல் மாண்டு மடிந்துள்ளன. பல இடங்களில் இன்னும் இவை கோரமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. கடற்கரைகளில் இறந்த மீன்கள் காட்சியளிப்பதுடன் நாற்றமும் வீசிக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் இறந்த மீன்கள் புதைக்கப்பட்டுவிட்டன. வீதிகளில் இன்னும் குப்பை கூளங்கள் கிடக்கின்றன. இவைகளெல்லாம் அகற்றப்பட்டு சுத்தம் செய்வது உடனடியாக நடைபெறக்கூடிய காரியமல்ல. இதனுல் தொற்றுநோய்கள் பரவ வாய்ப்புண்டு. தொற்றநோய் பரவினுல் சூருவளியிலிருந்து உயிர் தப்பியவர்களுக்கு அதைவிட மோசமான ஆபத்தையேற்படுத்துவதாகும். சூருவளி, வெள்ளம், பூகம்பம் போன்ற பேரழிவுக்காலத்தில் தொற்றுநோய்கள்பரவக்கூடிய ஆபத்து ஏற்படுமென்பது பலரும் நன்கு அறிந்த உண்மை. இங்கும் சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வைத்திய உதவியளிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. சூருவளி வீசி பேரழிவு நிகழ்ந்த ஒரு வாரத்தின் பின்னர் நேற்று முன்தினம்தான் சுகாதார வைத்திய அத்தியட்சகர் காரியாலயத்தில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டு தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது பற்றி முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி கூறுகிறது.

பேரழிவு ஏற்பட்டுள்ளது என்ற தகவல் கிடைத்ததுமே நோய் பரவாமல் தடுப்பதற்கும் ஆபத்தில் சிக்கியவர்களுக்கு வைத்திய உதவியளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது சுகாதார சேவைப் பகுதியினரின் முக்கிய கடமை.

தொற்றுநோய் பரவிய பின் நடவடிக்கை எடுப்பதால் உரிய பயன் கிடைக்க மாட்டாது. சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இனியும் தாமதமின்றி அவசியமான மருந்துகளையும் கிருமிநாசினிகளையும் அனுப்பவும் வைத்தியர்களையும் சுகாதாரசேவைஉத்தியோகத்தர்களையும்அனுப்பவும் சுகாதார இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுகாதார சேவைப்பகுதியினர் துரிதமாகச் செயலாற்றினுல் நாட்டிலுள்ள வைத்தியர்களும் மற்றவர்களும் பாதிக்கப்பட்ட இடங்களில் தொண்டு செய்வதற்கு தாமாகவே முன்வார்களென்பதில் சந்தேகமில்லை.

# கொழும்பு தெற்கில் தம்பிஐயா போட்டியிடலாம்
## வட்டுக்கோட்டையில் சம்பந்தர் போட்டியிடமாட்டார்

யாழ்ப்பாணம், புதன்

முன்னுள் ஊர்காவற்றுறை எம். பி. திரு. அல்பிரட் தம்பிஐயா நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார். பொதுத் தேர்தலில் அவரைப் போட்டியிடச்செய்வதற்கு முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. ஒரு அரசியல் கட்சியின் தலைவர் டெலிபோன்செய்து அவரை இங்குஅழைத்துள்ளதாகத்தெரிகிறது.

மீண்டும் ஊர்காவற்றுறைத் தொகுதியிலேயே திரு. தம்பிஜயாவைப் போட்டியிடும்படி சிலர் கேட்டுள்ளதாகவும், ஆனுல் இதுபற்றிஅவர் இன்னும் முடிவு செய்யவில்லையென்றும் தெரியவருகிறது. கொழும்பு தெற்குத்தொகுதியில் திரு. தம்பிஐயாவை தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்த யோசனை செய்யப்பட்டுவருவதாகவும் காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### சம்பந்தர் போட்டியிடார்

மூளாய் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் என். சி சம்பந்தர் எக்கட்சி சார்பிலும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடமாட்டாரென அறிவித்துள்ளார். தமிழ்க்காங்கிரஸ தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் ஒரு கோஷ்டி நேற்றையதினம் டாக்டர் சம்பந்தரைச் சந்தித்து தேர்தலில் நிற்குமாறு கேட்டுக்கொண்டதெனத் தெரிகிறது. எக்கட்சியின் சார்பிலும் அல்லது சுயேச்சையாகவோ தேர்தலில் போட்டியிடுவதில்லையென்றும் தமது சேவை வைத்தியத்துறையில் தான் இருக்குமெனவும் டாக்டர்சம்பந்தர் திட்டவட்டமாகஅறிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட இடங்களில் தொற்றுநோய் பரவமால் கண்காணிப்பு

கொழும்பு, செவ்வாய்

சூருவளியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்றுநோய்கள் பராவாவண்ணம் சுகாதார இலாகாவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குறிப்பாக மன்னூர்பகுதியில் சுகாதார இலாகா தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை புனருத்தாரணம் செய்வதில் அரசாங்கம் அதிகவனம் செலுத்தி வருவதா அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

சுகாதார சேவை டெபியுடி டைரக்டர் டாக்டர் ஜயசேகரா மன்னூர் சென்றுள்ளார். சமூகசேவை டைரக்டர் திரு. ஆர். ஜே. ரத்னதுங்காவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

திருக்கோணமலைக் கச்சேரியின் ஒருபகுதி பழுதுபார்க்கப்பட்டுள்ளது. தபால் கந்தோரின் திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மன்னூரில் வேண்டிய உணவு வகைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். மன்னர் சென்ற 'கஜபாகு' கொழும்பு வந்து உணவுவகைகளை மன்னூருக்குக் கொண்டு செல்லும்.

நாட்டில் பல ஸ்தாபனங்களும் கஷ்டமடைந்தவர்களுக்கு உதவ நிவாரணவேலைகளில் ஈடுபட்டுள்ளதுடன் நிதிகளும் திரட்டி வருகின்றன. கொழும்பு இந்துவாலிபர் சங்கம் தனது தொண்டர்களை நிவாரண வேலைகளுக்கென மன்னூருக்கும் யாழ்ப்பாணப் பகுதிக்கும் அனுப்பியுள்ளது.

# சர்வாதிகாரமா ஜனநாயகமா?

யாழ்ப்பாணம், செவ்.

அடுத்த பொதுத் தேர்தலின்பின் இலங்கையில் ஜனநாயக ஆட்சியா அல்லது சர்வாதிகார ஆட்சியா ஏற்படவேண்டும் என்பதையிட்டுத்தான் தேர்தல் நடைபெறுகிறது. இலங்கை முழுவதும் உள்ள தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக ஆட்சி முறையைப் பின்பற்றும் எந்தக்கட்சிக்கும் வாக்களிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன், என்று திரு. ஜி ஜி பொன்னம்பலம் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது திரு. செல்வநாயகம் நினைத்தால், மலைநாட்டைத்தவிர தமிழ் பகுதிகளிலிருந்து போட்டியின்றி அங்கத்தவர்களை அனுப்ப முடியும். போட்டியின்றித் தெரிவுசெய்யப்படும் அங்கத்தவர் பட்டியலில் எனது பெயர் இல்லாவிட்டாலும் பறுவாயில்லை. அந்தப்பட்டியலில் திறமைசாலிகள் இருக்கவேண்டும். திரு. செல்வநாயகம் பத்துமுறையும் போகலாம் சமஷ்டிக் கட்சியிலிருந்து இன்னும் ஏழு எட்டுப் பேர் போகட்டும். இதற்கு ஒரு சிலர் தான் தடையாக இருக்கிறுர்கள் என்பது எனக்குத் தெரியும். இந்த ஒரு சிலர் தடையாகவிருப்பதால் தமிழினத்தின் எதிர்காலம் இருளடையப் போகிறது.

# சூருவளிகஷ்ட நிவாரண நிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| ஸ்ரீமுருகானந்தா டெக்ஸ்டயில்ஸ் யாழ்ப்பாணம் | 11-00 |
| விக்னேஸ்வரா புடவை மாளிகை யாழ்ப்பாணம் | 10-00 |
| கல்யாணி, யாழ்ப்பாணம் | 10-00 |
| ஏ. சண்முகராசா, யாழ்ப்பாணம் | 10-00 |
| எஸ். ஏ. சோமசுந்தரம், யாழ்ப்பாணம் | 10-00 |
| எம், எம். ரி. பி. யாழ்ப்பாணம் | 10-00 |
| லெயிடின் ரேட்ஸ், யாழ்ப்பாணம் | 10-00 |
| எஸ். ஏ செல்லையா அன் கம்பெனி, யாழ்ப்பாணம் | 10-00 |
| எஸ் நவரத்தினம், யாழ்ப்பாணம் | 10-00 |
| கிருஷ்ண ஸ்டோர்ஸ், யாழ்ப்பாணம் | 10-00 |
| எஸ் சுப்பிரமணியம் அன் கோ, யாழ்ப்பாணம் | 10-00 |
| கணேசன் ஸ்டோர்ஸ், யாழ்ப்பாணம் | 10-00 |
| மீருலெப்பை அன் கோ, யாழ்ப்பாணம் | 10-00 |
| எம் பரராஜசிங்கம், யாழ்ப்பாணம் | 20-00 |
| ஏ எஸ் சிவலிங்கம், யாழ்ப்பாணம் | 5-00 |
| எஸ் ராமையா, யாழ்ப்பாணம் | 5-00 |
| எஸ் எஸ கனகரத்தினம், யாழ்ப்பாணம் | 5-00 |
| வ க குணரத்தினம், யாழ்ப்பாணம் | 5-00 |
| மா கேதீஸ்வரன். யாழ்ப்பாணம் | 5-00 |
| இ முருகேசு, யாழ்ப்பாணம் | 5-00 |
| ஏ எஸ் நடராசா, யாழ்ப்பாணம் | 5-00 |
| ஏ கே கனகசபாபதி, யாழ்ப்பாணம் | 5-00 |
| சி எஸ் கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், யாழ்ப்பாணம் | 5-00 |
| பிள்ளையார் விலாஸ், யாழ்ப்பாணம் | 5-00 |

# புள்ளிவிபரம் எடுக்க உத்தரவு

கொழும்பு, செவ்.

புயலின் காரணமாக உயிர் இழந்தவர்களினதும் அன்றைய தினம் வீடுகளிலிருந்து புறப்பட்டு வீடு திரும்பாதவர்களினதும் புள்ளி விபரத்தை எல்லா இடங்களிலும் எடுக்குமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இலங்கையிலுள்ள எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார். தனுஷ்கோடிக் கரையில் இறந்தவர்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாததாலும், அவர்களின் சடலங்கள் அழுகிய நிலையில் இருந்ததாலும், சடலங்கள் யாவும் அக்கரையிலேயே தகனம் செய்யப்பட்டதாக பொலிஸ் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. கரையோரப்பகுதிகளில் தான் அநேக உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

மன்னூரில் நேற்று தற்காலிகப் பொலிஸ்நிலையம் ஒன்று நிறுவப்பட்டு வேண்டிய நிவாரண வேலையில் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

# அங்கீகாரம் பெற்ற கட்சிகள்

கொழும்பு, செவ்வாய்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக விண்ணப்பஞ் செய்த 17 அரசியல் கட்சிகளில், புதிய தேர்தல் சட்டத்தின் கீழ், திரு. ஜி. ஜி.பொன்னம்பலம் தலைமையிலுள்ள தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தேர்தல் கமிஷனர் திரு. ஈ. எப். டயஸ் அபயசிங்காவிடமிருந்து அங்கீகாரத்தைபபெற்றுள்ளது.

கடந்த தேர்தலில் பங்கு பற்றி பாராளுமன்றத்திற்குச் சென்ற எட்டு அரசியல் கட்சிகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியின் அதிகாரமுள்ள உத்தியோகத்தராகத்தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் தனது கட்சிமூலம் போட்டியிடவிருக்கும் அங்கத்தவர்கள் பற்றி தேர்தல் கமிஷனருக்கு அறிவிப்பார். கட்சி அபேட்சகர்களின் கட்டுப்பணம் 250 ரூபாவாகும்.

லங்கா பிரஜா தந்திரக் கட்சியின் தலைவர் டபிள்யூ. தகநாயக்கா தமது கட்சியின் தேர்தல் சின்னத்தை மாற்றும்படி தேர்தல் கமிஷனரிடம் கோரியிருந்தார். இவரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடந்த தேர்தலில் திரு. தகநாயக்காவின் சின்னம் குடையாக இருந்தது. தற்பொழுது அவரது சின்னம் சூரியன்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளும் தேர்தல் சின்னங்களும்.

ஐக்கிய தேசியகட்சி-யானை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி-கை.

கம்யூனிஸ்ட் கட்சி- நட்சத்திரம்.

சமசமாஜக் கட்சி-திறப்பு,

ஜாதிக விமுக்தி பெரமுன-ஆகாயவிமானம்.

லங்கா பிரஜாதந்திரக்கட்சி-சூரியன்.

மக்கள் ஐக்கிய முன்னணி-வண்டில் சில்லு.

தமிழரசுக் கட்சி- வீடு.

தமிழ்க் காங்கிரஸ்-சைக்கிள்.

# கைமோசக்கொலை அதிகரிப்பு

கொழும்பு, செவ்.

பொலிஸ் தலைமைக் காரியாலயத் தகவலின்படி இன்று வரை இந்த ஆண்டிற்கு 621 கைமோசக் கொலைகள் நடந்திருப்பதாகத் தெரியவருகிறது. சென்ற ஆண்டில் 580 கைமோசக் கொலைகள் நடந்தேறியிருக்கின்றன, சென்ற ஆண்டில் விபத்தினுல் ஏற்பட்ட மரணம் 402. இந்த ஆண்டில் விபத்தினுல் ஏற்பட்ட மரணம் 402.

யாழ். நகரில்

# தீயணைப்பு படை நிறுவ அடையாள மான்யம்
## மாநகரசபை வரவுசெலவுத் திட்டத்தில் 5,79,068 ரூபா துண்டுவிழுகிறது

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணத்தில் தீயணைப்புப் படை ஒன்றை நிறுவுவதற்கு யாழ்.மாநகரசபையின் 1965-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அடையாள மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1965-ம் ஆண்டில், பொது வரியால் 2,646,?42 ரூபா வருமானமும், மின்சார வகையால் 1,723,800 ரூபா வருமானமும் கிடைக்கவிருக்கிறது. மொத்தச் செலவு 4,951,810 ரூபா ஏற்படவிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதால் 579068 ரூபா துண்டுவிழுகின்றது.

குறிப்பிட்ட ஆண்டில் வரி விகிதங்கள் மூலம் 7,20,227 ரூபா கிடைக்குமெனவும் களியாட்ட வரிமூலம் 400,000 ரூபா கிடைக்குமெனவும் மாநகர நீதிமன்றம் மூலம் 80,009 ரூபா கிடைக்குமெனவும், சந்தைகள் வரி மூலம் 308048 ரூபாவும், பஸ்நிலையம் மூலம் 24637 ரூபாவும் குருநகர் வீடுகள் மூலம் 28,500 ரூபாவும் மோட்டார் வாகனங்களால் 51,500 ரூபாவும் அபாயகரமான, சட்டவிரோதமான தொழில்களால் 45,840 ரூபாவும் வருமானம் கிடைக்குமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடன், அரசாங்கக் கொடை நிதி மூலமாக 1,723 300 ரூபா வருமானம் கிடைக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தெருக்களுக்கு மின்சார ஒளியூட்ட 219,000 ரூபாவும் தண்ணீர் வசதிக்கு 78242 ரூபாவும், நூல்நிலைய வசதிகளுக்கு 40748 ரூபாவும் திறந்தவெளி அரங்கிற்கு 5000 ரூபாவும் மத்திய நூல்நிலைய கட்டிடத்திற்கு 5,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. வீதிகளுக்கும் ஒழுங்கைகளுக்கும் எந்தவகையிலும் நிதி ஒதுக்கப்படவில்லை. புதிய சந்தைக்கும் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. இப்போதைய சந்தைச் செலவினங்களுக்கு 226,391 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தீயணைப்புப் படை நிறுவ அடையாள மான்யமாக 100 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# சேதுசமுத்திர திட்டமும், பாம்பன்சாலைபாலமும் 3-ம் திட்டத்திலேயே பூர்த்தியாகும்

## சேதப்பகுதிகளுக்கு டி. டி. கே. பக்தவத்சலம் ஆகியோர் விஜயம்

### 5000 பேர் மாண்டதாக தகவல்

சென்னை, டிச. 29

**கடல் கொந்தளிப்பினலும், புயலினலும் அடித்துச் செல்லப்பட்ட 6700 அடி நீளமான பாம்பன் பாலத்திற்குப் பதில் புதிய சாலைப்பாலம் ஒன்றை அமைப்பதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. நடப்புத் திட்டமான மூன்றும் ஐந்தாண்டுத்திட்ட காலத்திலே அதுபூர்த்தி செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.**

**அதேசமயம் 4-ம் திட்டத்தில் இடம்பெற்றுள்ள சேது சமுத்திரத்திட்டத்தை மூன்றும் திட்டத்திலேயே அமுல் நடத்துவதன்மூலம் அகதிகளுக்கு மறுவாழ்வளிப்பு அளிக்கும் நடவடிக்கைபற்றியும் ஆராயப்படுகிறது.**

இந்திய நிதிமந்திரி திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று சேதமடைந்த பகுதிகளை ஹெலிகோப்டர்மூலம் பார்வையிட்டார். அவருடன் விமானப்படை உயர் அதிகாரியும் சென்றிருந்தார். அதேசமயம் முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் மற்றொரு ஹெலிகோப்டர்மூலம் சேதப்பகுதிகளைப் பார்வையிட்டார்.

டி. டி. கே. நிருபர்களுக்களித்த பேட்டியில் தனுஷ்கோடி முற்றாக மூழ்கிவிட்டது என்றும் ராமேஸ்வரம் தொடர்பின்றித் துண்டிக்கப்பட்டுவிட்டதென்றும் கூறினர்.

நீரினல் சூழப்பட்டிருந்த 2000 பேரும் மீட்கப்பட்டு பிரதான பூமிக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டார்கள் என்றும், விமானமூலம் இன்னும் உதவி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாயும் டி. டி. கே. கூறினர்.

இந்த அகதிகளுக்கு உணவு அளிப்பதும் அவர்களின் மறுவாழ்விப்புமே முக்கிய பிரச்னை என்றும் அவர் கூறினர்.

புயல், கடல் கொந்தளிப்பினல் தென்னிந்தியாவில் இறந்தவர்களின் தொகை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையாயினும் 5000 பேர் மாண்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் கூறுகின்றன.

திரு. டி. டி. கே. சேது சமுத்திரத் திட்டத்தை நடப்பு திட்டத்திலேயே அமுல்நடத்துவது சம்பந்தமாக மதுரையில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஆராய்ந்தார்.

நடப்புத் திட்டத்திலேயே சேதுசமுத்திர வேலைகளை ஆரம்பிக்குமாறு தாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளப் போவதாய் முதன் மந்திரி பக்தவத்சலம் கூறினர். மண்டபத்தையும் ராமேஸ்வரத்தையும் இணைக்கும் பாம்பனில் ரஸ்தா பாலமும் நடப்புத்திட்டத்தில் பூர்த்தியாக்கப்படும் என்றும் பக்தவத்சலம் கூறினர்.

புயல் அகதிகளுக்கு திரு. சாஸ்திரி, பிரதமமந்திரி நிவாரணநிதியிலிருந்து ரூ 50,000-க்கு ஒரு செக் அனுப்பியிருக்கிறார். ஏற்கனவே அவர் ரூ. 25000 அனுப்பிவைத்திருந்தார். ஆந்திரப் பிரதேசமுதன் மந்திரி திரு. நிஜலிங்கப்பா ரூ.10000க்கு ஒருசெக்கை திரு பக்தவத்சலத்துக்கு அனுப்பியிருக்கிறார்.

திரு. கிருஷ்ணமாச்சாரி நேற்று மண்டபத்தில் இறங்கி அகதிகளை குடியமர்த்துவது பற்றி அதிகாரிகளுடன் விவாதித்தார். புயலினல் ஏற்பட்ட சேதம் குறித்து எலிஸபெத் மகாராணி, ஜனதிபதி ராதாகிருஷ்ணனுக்கு அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

## பாகிஸ்தானில் சிறுபான்மைத் தலைவர் கைது

டாக்கா, டிச. 29

கிழக்குப்பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முன்னள் மந்திரியொருவர் கைதுசெய்யப்பட்டார். சென்ற வாரம் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த மற்றொரு முன்னள் மந்திரி இதேபோல் கைதுசெய்யப்பட்டார்.

## 5 பாகிஸ்தானியர் பலி

புதுடில்லி, டிச. 29

கடந்த மூன்று தினங்களாக காஷ்மீர் ஸாம்பிரிவில் பாகிஸ்தான் துருப்புக்கள் அத்துமீறியதாயும் இதன் விளைவாக ஐந்து பாகிஸ்தானியர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஓர் இந்திய கிராமவாசிக்குக் காயமேற்பட்டது. மற்றொரு கிராமவாசியை அவர்கள் பிடித்துச் சென்றனர். பாகிஸ்தானியர் 4,0000 ரவுண்டுகள் சுட்டனராம்.

## கராச்சியில் 2-ம் நாள் ஊரடங்கு

கராச்சி, டிச 29

கராச்சியில் நேற்று மாலை 2-ம் நாளாக மாலை முதல் காலைவரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

## குவாய்த் பிரதமர் ராஜினமா

லண்டன், டிச. 29

குவாய்த் பிரதமர் திரு. ஸபா ராஜினமா செய்துவிட்டார். புதிய மந்திரிசபை அமைக்கப்படும் வரை பதவியிலிருக்குமாறு அவரை குவாயத் அமீர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

## பீகிங் புகார்

பீகிங், டிச. 29

இந்திய விமானங்கள் திபேத், சிக்கியாங் ஆகிய சீனப்பிரதேசங்கள்மீது அத்துமீறிவருவதாயும், உடன் இதை நிறுத்துமாறும் பீகிங் அரசாங்கம் இந்தியாவைக் கேட்டிருக்கிறது.

## சீன-ரஷ்ய உறவு

கெய்ரோ, டிச. 29

சீனவுடன் ரஷ்யாவின் உறவு படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருவதாயும், நாளடைவில் சீரான உறவு ஏற்படுமென்றும் இங்கு விஜயம் செய்த சோவியத் உதவிப் பிரதமர் கூறினர்.

## திரு. ஸாரகாத் இத்தாலியின் புதிய ஜனதிபதியானர்

### 21 வாக்கெடுப்புகளுக்குப்பின் தெரிவு செய்யப்பட்டார்

ரோமாபுரி, டிச. 29

21 வாக்கெடுப்புகளுக்குப்பின் கடைசியாக நேற்று சமூக ஜனநாயகக்கட்சித் தலைவரும், இத்தாலிய வெளிநாட்டு மந்திரியுமான செனேர்ஸாரகாத் இத்தாலியின் புதிய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். தேவையான வாக்குகளுக்கு மேல் அதிக வாக்குகள் கிடைத்தன. திரு. ஸாரகாத்துக்கு 646 வாக்குகள் கிடைத்தன. (482 வாக்குகள் கிடைத்தால் போதுமானது.)

66 வயதான திரு. ஸாரகாத்தின் தெரிவைப் பாராட்டி அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறர்.

புதிய ஜனதிபதி தெரிவைப் பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா வரவேற்றது. திரு. ஸாரகாத் பிரிட்டனின் நண்பர் என்றும் அது கூறியது.

பாரிசிலும் இத்தெரிவு வரவேற்கப்பட்டது.

இத்தாலியில் ஜனதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய கடந்த 13 நாட்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## ஈரானின் கோபம்

டெஹ்ரான், டிச. 29

சூயஸ் நெருக்கடியின்போது ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஈரான் உதவியளித்தும்கூட ஜனதிபதி நாஸர் ஈரானுக்கு விரோதமான பிரசார இயக்கத்திலீடுபட்டிருக்கிறர் என்றும், வெளி பயமுறுத்தலுக்கு ஈரான் அடிபணியாது என்றும் ஈரான் ராணுவப்படைகள் பலப்படுத்தப்படவிருப்பதாயும் ஈரான் பிரதமர் கூறினர்.

## புதிய தலைவர் தெரிவு

காங்கேசன்துறை, செவ்.

காங்கேசன்துறைப் பட்டின சபையின் புதிய தலைவர் தெரிவு நாளைக்காலை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகரால் புதிய தலைவர் தெரிவுக்கான விசேஷ கூட்டம் கூட்டப்படுகிறது.

## ஆசியக் கடலில் அணுசக்திமிக்க யு.எஸ். நீர்மூழ்கி

### ஏவுகணைகளுடன் நடமாட்டம்

வாஷிங்டன், டிச 29

போலாரிஸ் ஏவாயுதம் பொருத்தப்பட்ட அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி "டேனியேல் பூன்" ஆசிய கடற்பகுதிக்குச் சென்றிருக்கிறது என அமெரிக்க பாதுகாப்பிலாகா அறிவித்தது. இதேபோன்ற மற்றும் 6 நீர்மூழ்கிகள் அப்பகுதிக்குச் செல்லும்.

இந்தநீர்மூழ்கியில் 16 "ஏ-2" ஏவாயுதங்கள் பொருத்தப்பட்டிருப்பதாயும், 1600 மைல் தூரம் செல்லக்கூடிய இந்த ஏவுகணைகள் சீனவின் பாதித்தூரத்தை இவை கடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சீன அணுக்குண்டு வெடித்த மூன்று மாதத்திற்குள் இந்த முதலாவது நீர்மூழ்கி அனுப்பப்பட்டதாக பாதுகாப்பு இலாகா அதிகாரி ஒருவர் கூறினர்.

"டேனியேல் பூன்" என்ற இந்த அணுசக்தி நீர்மூழ்கி 800 மைல் செல்லக்கூடிய "ஏ-3" போலாரிஸ் ஏவுகணைகளை பொருத்தக்கூடிய முறையிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## சூறாவளிசேதம்; பிரிட்டன் கவலை

லண்டன், டிச. 29

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மந்திரி இலங்கையில் ஏற்பட்ட சூறாவளி சேதம் குறித்து அனுதாபம் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவிகள் அளிக்க பிரிட்டன் தயாராகவிருக்கிறதென்றும் எப்படியான உதவிகள் தேவையென்று இலங்கை அரசாங்கத்திடம் விபரமறிந்து தமக்கு அறிவிக்கும்படி தாம் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரை கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய வீரர்களுக்கு ஞாபகச்சின்னங்கள்

புதுடில்லி, டிச 29

அஸ்ஸாமில் தேஜ்பூருக்கருகே சீனருக்கெதிரான சண்டையில் உயிர்நீத்த வீரர்களுக்கான ஞாபகச் சின்னம் ஒன்றை ஸ்ரீமதி இந்திராகாந்தி திறந்துவைத்தார். டில்லியிலும் இதேபோன்ற ஞாபகச்சின்னம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

பஞ்சாபில் பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய தேசிய வீரர்களுக்கு மூன்று நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த வீரர்கள் ஆங்கில ஆட்சிக்கு அப்போது சிம்ம சொப்பனமாய் இருந்தவர்கள்.

## ஜோன்ஸன் இவ்வாண்டு பிரமுகர்

நியூயோர்க், டிச. 29

அமெரிக்கஜனதிபதி ஜோன்ஸனை இந்த ஆண்டு பிரமுகராக "டைம்" பத்திரிகை கணித்திருக்கிறது.

நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனதிபதி தேர்தலிலிருந்தும் திரு. ஜோன்ஸனுக்கு சரித்திரத்திலில்லாத அளவு மெஜாரிட்டி கிடைத்ததிலிருந்தும் அவர் இவ்வாண்டு பிரமுகராக வளர்ந்திருக்கிறர் என அது

## சாவன்

புதுடில்லி, டிச. 29

சீன மீண்டும் தாக்கினல் தற்போதைய சாதனங்களுடன் அதைச் சமாளிப்போம் என பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறியிருக்கிறர்.

## வீடமைப்புக்கு 530 கோடி

புதுடில்லி, டிச. 29

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் வீடமைப்புக்கு 530 கோடி ரூபாய் செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

## மாஸேதுங்

பாரிஸ், டிச. 29

ஜனதிபதி ஜோன்ஸனை இவ்வாண்டுப் பிரமுகராக "டைம்" பத்திரிகை கணித்திருக்கும் அதேசமயம், பிரெஞ்சு வாரப்பத்திரிகை "எல் எக்ஸ்பிரஸ்" மாஸேதுங்கை இவ்வாண்டுப் பிரமுகராகக் கணித்திருக்கிறது. குருஷ்சேவை பதவியிலிருந்து வீழ்த்தியது, அணுகுண்டு சோதனை ஆகிய இரண்டுக்காக அவரது பெயர் கணிக்கப்பட்டிருக்கிறது.

## வியட்னும் மீது கடும் தாக்குதல்

சைகோன், டிச. 29

சைகோனுக்கு 75 மைல் தூரத்தில் தென் வியட்னும் அரசாங்கத் துருப்புக்கள், அமெரிக்க ஹெலிகோப்டர் உதவியுடன் பெருந் தாக்குதலில் ஈடுபட்டு, வியட்காங் ராணுவத் தலைமைக் காரியாலயத்தைக் கைப்பற்றிவிட்டதாய் அறிவிக்கப்பட்டது. இத் தாக்குதலில் 65 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர். அரசாங்கத்தரப்பில் 11 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்தனர்.

## நைஜீரிய தேர்தல் கெடுபிடி

லாகோஸ், டிச. 29

நைஜீரியாவில் நாளை நடைபெறவிருக்கும் தேர்தலை ஒத்திவைப்பது சம்பந்தமாக ஜனதிபதிக்கும் பிரதம மந்திரிக்குமிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதாயும். இதைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. ஆளும் கட்சி அபேட்சகர்களின நியமனத்தில் ஒழுங்கீனம் இருப்பதாயும், தேர்தலை ஒத்திவைக்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சியினர் கேட்டிருக்கின்றனர்.

## கோவா பெரிய கடல்தளமாகும்

புதுடில்லி, டிச. 29

கோவா, பெரிய கடற்படைத்தளமாக்கப்படவிருப்பதாய் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் அறிவித்தார்.

## போர்னியோவில் துப்பாக்கிச்சூடு

கோலாலம்பூர், டிச. 29

நேற்று போர்னியோ எல்லையில் இந்தோனேஷிய கொரில்லாக்கள் இடைவிடாது சுட்டுக்கொண்டிருந்ததாய் அறிவிக்கப்படுகிறது.

# "தீண்டாமையை ஒழித்தால் சுதந்திர வாழ்வு கிடைக்கும்"

## மனித உரிமைகள் கருத்தரங்கில் திரு. செல்வநாயகம் கருத்து

கல்லூர், புதன்

'இந்தியா, இலங்கைபோன்ற நாடுகள் அந்நிய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டு அல்லற்பட்டமைக்கு அதன் கர்மபலனே காரணமாகும். பல நூற்றாண்டுகளாக தீண்டாமையைக் கைக்கொண்டு வந்ததனுல்தான் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக் கஷ்டப்படவேண்டி நேர்ந்தது. தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென இந்திய மக்கள் எண்ணங்கொண்டபோது சுதந்திரவாழ்வு கிடைத்தது' என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெல்லிப்பழையில் நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கிற்கு தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் தெல்லிப்பழை முற்போக்கு ஐக்கிய வாலிபர் கழகத்தினரால் மனித உரிமைகளைப் பற்றிய கருத்தரங்கு நடத்தப்பட்டது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது:

இந்தியாவில் தீண்டாமை ஒழிய சுதந்திரம் மலர்ந்தது போல இலங்கையிலும் தீண்டாமை ஒழிந்து வருகிறது. ஆனல் அது விரட்டப்பட்டு வரும் வேகம் போதுமானதாக இல்லை.

சில ஆண்டுகளுக்கு இடையில் இந்தக் கொடுமைகள் நீக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் தமிழினம் சிங்களவர்களுக்கு அடிமையாக வாழாமல் சுதந்திர வாழ்வு எய்தும். தீண்டாமை ஒழிப்புப்பற்றி மேடைகளில் பேசுவதனால் எந்தவிதமான பயனுமில்லை. இதனைச் செயலிற் காண்பிக்க எல்லோரும் முன்வரவேண்டும்.

தீண்டாமை ஒரு பழக்கமே தவிர வேறு ஒன்றுமில்லை. இந்தப் பழக்கத்தை மாற்றுவதில் அனைவரும் முயற்சித்தால் அனைவருக்கும் நன்மை உண்டாகும். நம்முள் ஒரு பகுதியினரை ஒதுக்கிவைத்துவிட்டு உரிமைகளுக்காகப் போராட முடியாது."

வட்டுக்கோட்டை முன்னுள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசியதாவது:

### இனத்தின் பிரச்னை

தீண்டாமை தனி மனிதனின் பிரச்னையல்ல. அது ஓர் இனத்தின் பிரச்னை. இனத்தின் பிரச்னை முதலில் களையெடுக்கப்பட்டால்தான் அந்த இனம் தன்மானத்துடன் வாழமுடியும். கட்சிபேதங்களின்றி இப்பிரச்னையை அனைவரும் தீர்க்கப் பாடுபடவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் சாதிப் பாகுபாடு காட்டப்படும் விஷயத்தில் கவனம் எடுத்து இதற்காகப் பெரிதும் உழைக்கவேண்டும். இப்போது பாடசாலைகளில் இத்தீண்டாமை அகற்றப்பட்டுவிட்டது. பொது இடங்களிலும் குறைந்து வருகிறது. அதேபோல எல்லா இடங்களிலும் இந்த ஒழிப்பு முறை ஏற்படவேண்டும்.

வருங்காலச் சந்ததியினருக்காகவாவது சாதிகள் இல்லை என்ற நிலையை உண்டாக்கவேண்டும். இளஞ்சந்ததியினரின் விடுதலைக்காக, நாம் தீண்டாமை ஒழிப்பில் ஈடுபடவேண்டும். ஆந்த ஏற்றத்தாழ்வு மனப்பான்மை நம்மை விட்டு அகலாதவரை நமக்கு விமோசனம் இல்லை.

இந்தப் பிரச்னையைக் தீர்ப்பதற்கான வழிவகைகளையும் நாம் ஆராயவேண்டும். பலாத்காரத்தினுல் நாம் எதனையும் சாதிக்கமுடியாது. புரட்சி என்று எதற்கெடுத்தாலும் பேசுகிறார்கள். ஆனல் புரட்சி ஏற்பட்டால் அதனைத் தொடர்ந்து எதிர்ப்பு இயக்கம் வலுவடையும். இதனல் மோதல் ஏற்படும். மோதல்களினுல் பிரச்னை தீர முடியாது. அப்பிரச்னையை தார்மீக ரீதியிலே தான் நாம் தீர்க்கப்பாடுபடவேண்டும்.

அன்புநெறியில் போராட்டம் வெற்றிபெறமுடியும் என்பதனை உலகுக்குணர்த்தியவர் மகாத்மா காந்தி. இதனைப் பின்பற்றி அமெரிக்காவில் நீக்ரோ மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியை எதிர்த்து மார்டின் லூதர் கிங் என்னும் நீக்ரோ தலைவர் போராடி வெற்றிகண்டு, நோபல் பரிசினைப் பெற்றுள்ளார். இத்தகைய சூழ்நிலை உலகில் உருவாகிவருகையில் நாமும் நமது உரிமைகளை அஹிம்சையின் வழியிலான போராட்டத்தினுலேயே பெறவேண்டும்.

### தர்மம் நிலைக்கமுடியுமா?

தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் முன்னுள் தலைவர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசியதாவது:

இலங்கைச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சமஉரிமை, தன்மானம், சம சந்தர்ப்பம் என்பன தமிழ் இனத்துக்கு மறுக்கப்படுகின்றன. சட்டரீதியாகவும் மறுக்கப்படுகின்றன. ஏற்றத்தாழ்வுகள் சட்டத்திலும், நிர்வாகச் செயலிலும் அமுல் நடத்தப்படுகின்றன. முதலில் எமக்குள்ள பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்.

மனிதாபிமானத்திலே நமது சமுதாயம் உயர்ந்துள்ளதாயினும் நாம் நமக்குள் உள்ள குறைபாடுகளைக் களையவேண்டும். இதனைவிடுத்து வேறு விஷயங்களில் சிரத்தைகாட்டுவதில் பயனில்லை உரிமைகள் மறுக்கப்படும் இடத்தில் சன்மார்க்கம் நல்லொழுக்கம் என்பன நிலைக்கமுடியாது. இதனை அனுபவரீதியாக நாம் உணர்ந்திருக்கின்றோம். எனவே இதற்காகப் போராடுவதில் நாம் முன்நிற்கவேண்டும்."

வழக்கறிஞர் திரு நம. சிவப்பிரகாசம் பேசியதாவது-

அரசியலை அறஇயலாக மாற்றியமைத்தவர் மகாத்மா காந்தி. மனித உரிமைகளை மறுப்பவர்கள் மனிதர்களல்லர். மனித உரிமைகள் என்ன என்பதுபற்றிய விளக்கங்கள் தேவையில்லை. ஒருவன் அனுபவிக்கின்ற உரிமைகளை மறுமனிதனும் அனுபவிக்கவேண்டும். சமுதாயச் சிற்பிகள் மனித உரிமைகளுக்காகப் போராடிவந்திருக்கிறார்கள்.

முன்னுள் செனட்டர் பி. நாகலிங்கம், திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன், திருவாளர்கள் இளங்கீரன், கே. டானியல், த. செல்வரத்தினம், ஜே. எஸ். சுந்தரம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர்.


ராஜா சினிமா
(அரியாலை)
கல்யாணகுமார்-தேவிகா
நடிக்கும்
நெஞ்சில் ஓர் ஆலயம்

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 8 5
மனோகர்-பண்டரிபாய்
நடித்த
புனிதவதி

REGAL — JAFFNA
NOW SHOWING
Joel Mccrea
in
Alfred Hitchcock's
FOREIGN
CORRESPONDENT

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி — பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)
மற்றும் 4 திரைகளில்
நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
கொடைவள்ளல் கர்ணனுக நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கர்ணன்

5-வது மகத்தான வாரம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத
பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்
சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன் கே. சோமு


# கர்ப்பிணிக்கு தீ வைத்தாராம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மூன்று மாதக் கர்ப்பிணியான செபமாலை (வயது 23) என்பவர்மீது அவரது கணவன் மண்ணெண்ணெயை ஊற்றித் தீவைத்தாராம். இதனுல் செபமாலை பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி தற்போது யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பரிதாப சம்பவம் அச்செழுவில் நேற்றிரவு 8-30 மணியளவில் இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

சமையல் செய்வதில் தாமதமேற்பட்டுவிட்டதாலேயே ஆத்திரங்கொண்ட செபமாலையின் கணவரான வைரவி முத்துவேலு என்பவர் இவ்வாறு செய்ததாகக் கூறப்படுகிறது.

செபமாலையின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும் அவரது கணவரான முத்துவேலுவைப் பொலிஸார் தேடிவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸைத் தாக்கியதாக வழக்கு

## எதிரிகள் விடுதலை

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஆர். பியரட்னுவைத் தாக்கியதாக இராணுவப் பொலிஸைச் சேர்ந்த சிவபாதசுந்தரம், செல்லையா ஆகிய இருவர் மீதும் சாவகச்சேரிப் பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மஜிஸ்டிரேட் திரு ஜெபேர்ட் சில்வா எதிரிகள் இருவரையும் விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பொலிஸ் கான்ஸ்டபிள் அன்ரனும் சார்ஜண்ட் மகாலிங்கமும் சாட்சியமளித்தனர். பின்னர் எதிரிகளின் வழக்கறிஞர்கள் தொகுப்புரை நிகழ்த்தினர்கள். முதலாம் எதிரியின் வழக்கறிஞர் 1-ம் எதிரி சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்தார் என்று வழக்காளி தரப்பில் நிரூபிக்கப்படவில்லையென்றும்; இரண்டாம் எதிரியின் வழக்கறிஞர் கான்ஸ்டபிள்கள் பியரட்னுவினதும், அன்ரனினதும் சாட்சியங்களை நம்பமுடியாதென்றும் தங்கள் தொகுப்புரையின் போது கூறினர்கள்.

நீதியரசர் அவற்றை ஏற்றுக்கொண்டு எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்துக் காரணம் கூறுவதை ஒத்திவைத்தார்.

1-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் கே. வி. எஸ். சண்முகநாதனும், 2-ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் எம். பாலசுந்தரமும் திரு ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடன் ஆஜரானர்கள்.

# 'நிவாரணம் வழங்கவேண்டும்'

ஊர்காவற்றுறை, திங்கள்

புயலினுல் பாதிக்கப்பட்ட கிராமசபையின் எல்லா வட்டாரங்களுக்கும் நிவாரணம் வழங்கவேண்டும் என்ற தீர்மானத்தை சென்ற சனிக்கிழமை கூடிய கூட்டத்தில் புங்குடுதீவுக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

திரு கு. வி. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தெங்குப்பொருள் அபிவிருத்தி கருதி புங்குடுதீவு முழுவதும் பன்னிரண்டுமாதங்களிலும்கட்டாக்காலிமாடு, ஆடு பிடித்தலை அமுல் நடத்த வேண்டும்என்ற தீர்மானமும் சோலைவரியை அமுல்நடத்த வேண்டும்என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது' இதற்கான ஆரம்பமுயற்சிகள் விரைவில் கையாளப்படவிருப்பதாக தலைவர் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

வட்டார அபிவிருத்தி வேலைகளைச் சிரமதான மூலம் செய்விக்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# இருவர் பரிதாப மரணம்

மஸ்கேலியா, செவ்

நாகசேனையைச் சேர்ந்த வட்டகொடை மேபீல்ட் சந்தியில் ஒருகார் 265 அடி பள்ளத்தில் பாய்ந்ததால் காரில் பிரயாணம் செய்த ஒரு பௌத்த பிக்குவும், லலிதா என்ற சிங்களப் பெண்மணியும மாண்டனர் மேற்படி விபத்து ஆல்புருக் பஜாரிலிருந்து தலவாக்கொல்லை நோக்கி அக்கார் சென்ற பொழுது சம்பவித்துள்ளது. காரில் பிரயாணம் செய்த ஐந்து பேர் அபாயகரமான நிலையில் நாகசேனை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.




# "ஜி. ஜி. க்கு எதிராக போட்டி போட வேண்டாம்"

## சிவசிதம்பரம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

நேற்று முற்றவெளி மைதானத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் கூட்டத்தில் பேசிய உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு எம். சிவசிதம்பரம் யாழ்ப்பாணத் தொகுதியில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துப் போட்டியிட வேண்டாமென்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த காலரை வருடங்களாக பாராளுமன்றத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இல்லாதது தமிழ் மக்களுக்கு பெரிய இழப்பென்றும் இம்முறை அதிகப்படியான வாக்குகளால் யாழ்ப்பாண மக்கள் அவரைத் தேர்ந்தனுப்ப வேண்டுமென்றும் திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது கூறினர்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: பாராளுமன்றத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குக் கட்டாய ஓய்வுபற்றிய பிரச்னை வந்தபோது பாராளுமன்றத்தில் தமிழ்க் காங்கிரஸ் எம். பி. யான உடுப்பிட்டி எம். பி. மட்டும் தான் அதை எதிர்த்து குரலெழுப்பினுன் என்பதை கூறுவதில் நான் பெருமைப்படுகிறேன். அந்தநேரம் பாராளுமன்றத்தில் திரு ஜி ஜி பொன்னம்பலம், திரு வி சுந்தரலிங்கம் இருந்திருந்தால் பாராளுமன்றம் கிடுகிடுத்திருக்கும். ஆதலால் எதிர்வரும் தேர்தலில் சக்தியும், அறிவும், ஆற்றலும் வல்லமையும் திறமையுமுள்ள அபேட்சகர்களை ஒவ்வொரு தொகுதியிலும் தேர்ந்தனுப்ப வேண்டும்.

ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருமொழி பேசுகிறவர்கள், ஒருபொது எதிரியை எதிர்க்கிறவர்கள் ஏன் ஒற்றுமைப்பட முடியாது?

கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு ஏ. சிவசுந்தரம் பேசுகையில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கக் கூடாதென்று கூறுபவர்கள் அதற்கு மாற்றுமருந்து கூறவில்லையென்றும் தமிழ்மக்கள் எல்லோரும் சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைத்து அரசாங்கத்தை ஒன்றுசேர்ந்து எதிர்ப்போம் என்று நான் திரு. செல்வநாயகத்திடம் கூறிய பொழுது அவர் மறுத்துவிட்டார் என்றும் கூறினர்.

உடுவில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. சிவநேசன் பேசும்போது கூறியதாவது-

மட்டக்களப்பு இரட்டைத் தொகுதியில் இரகசிய திட்டத்தின்படி ஒன்றை சிறிமாவிற்காக விட்டுக்கொடுத்த சமஷ்டிக்கட்சியினர் உரிமைப் போரில் ஒத்துழைத்த உடுப்பிட்டி சிவசிதம்பரத்திற்கு போட்டி போடுகிறார்கள். மூதூர் இரட்டைத் தொகுதியில் ஒன்றை அரசாங்கத்தின் கையாளுக்காக விட்டுக்கொடுத்த சமஷ்டிக்கட்சி யாழ்ப்பாணத் தொகுதியில் நான்கு தடவைகள் தோல்வியடைந்த பின்பும் திரு. பொன்னம்பலத்திற்கு போட்டிபோடுகிறார்கள்.

பருத்தித்துறை தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு. என் நடராசா பேசும்போது கூறியதாவது-

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட எல்லா அங்கத்தவர்களும் திரு. செல்வநாயகத்துடன் ஒத்துழைத்தார்கள். தமிழ்மொழிக்கு உரிமை கிடைத்ததா? தமிழ் மக்களுக்கு வாழ்வு கிடைத்ததா? தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு நிம்மதி கிடைத்ததா? கடந்த காலரை ஆண்டுகளாகத் தமிழ்மொழி கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவருகிறது.

நல்லூர் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. சி. அருளம்பலம் பேசும்போது கூறியதாவது-

சிங்கள மக்களிடையே இரண்டு பெரும்பான்மைக் கட்சிகள் மட்டுமே இருக்கின்றன. ஒன்று ஐக்கிய தேசியக் கட்சி மற்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சி. 1960ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியிடமும், 1964ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமும் பேச்சுவார்த்தை நடத்தி குறைந்த பட்சக் கோரிக்கையைக்கூடப் பெறத் தமிழரசுக் கட்சியினர் தவறிவிட்டனர்.

சிங்களக் கட்சிகளுடன் சிறந்தமுறையில் பேச்சுவார்த்தை நடத்தி நமது இழந்த உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய திறமைசாலிகளை ஒவ்வொரு தொகுதிகளிலும் அனுப்பப் பொதுமக்கள் முன்வரவேண்டும். சிங்கள மக்கள் தமிழரசு என்றால் நாட்டைப் பிரிப்பதென்று கருதுகிறார்கள். அதனால்தான் சிங்களத் தலைவர்கள் தமிழரசுக் கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகளை அவை நியாயமானவை என்று தெரிந்தும் கொடுக்கப் பயப்படுகிறார்கள். சிங்களத் தலைவர்களுடன் சீரியமுறையில் பேச்சுவார்த்தை நடத்தி நமது உரிமையைப்பெறத் திறமைசாலிகளைத் தேர்ந்தனுப்பவேண்டும்.

சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர் திரு. எம். சிவானந்தன் தவிர்க்கமுடியாத காரணத்தால் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியவில்லையென்று டெலிபோன் மூலம் அறிவித்திருந்தார்.

திருவாளர்கள் முத்துசாமிப்பிள்ளை, பொ. குணசிங்கராசா, ஆனந்தராசா, முன்னாள் செனட்டர் கனகநாயகம் மற்றும் பலரும் பேசினர்.

---

## காங்கிரஸ் தோற்றது

### பங்களூர் முனிசிபல் தேர்தல் முடிவுகள்

பங்களூர், டிச. 29

பங்களூர் முனிசிபல் கார்ப்பரேஷன தேர்தலில் காங்கிரஸ் தன் மெஜாரிட்டியை இழந்துவிட்டது. 14 ஆண்டுகளுக்கு முன் இந்தக் கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டதிலிருந்து காங்கிரஸ் தோல்வியுற்றது இதுவே முதற்தடவை. 62 ஸ்தானங்கள் கொண்ட பங்களூர் கார்ப்பரேஷனில் காங்கிரஸ 23 ஸ்தானங்களையும், சகல எதிர்க்கட்சிகளையும் கொண்ட நகராட்சி முன்னணி 20 ஸ்தானங்களையும், சுயேச்சையினர் 19 ஸ்தானங்களையும் பெற்றனர்.

## கூட்டுறவு ஆஸ்பத்திரி

சுழிபுரம், செவ்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வருடாந்தபொதுக் கூட்டம் சித்தங்கேணி கணேச வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத்தலைவர் முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கடந்த வருடத்தின் சுத்த இலாபமாக ரூபா 48,764-75 சங்கம் பெற்றுள்ளது.

பலவருடங்களாக வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் எம். ஓ. சாக்கோவின் ஞாபகார்த்தமாக ஒரு மண்டபம் கட்டட வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வைத்தியசாலையின் தலைவராக மீண்டும் முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

---

## விமானமூலம் உணவு விநியோகம்

மன்னூர், செவ்.

மன்னூரில் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை விமானப்படை விமானங்கள் இன்றும் உணவுப் பொட்டலங்களை விநியோகம் செய்தன. நேற்று இந்த விமானங்கள், மூன்று தடவைகளில் உணவு விநியோகம் செய்தன, சூறாவளியினலும், வெள்ளத்தினலும் பாதிக்கப்பட்ட மன்னூர் மக்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## தேவாலய மண்டபம் சேதம்

ஊர்காவற்றுறை, செவ்.

புயல் காற்றினல், நாரந்தனை ஆர். சி. பிலோமினு தேவாலய முன் மண்டபம் விழுந்து பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஒரே மண்டபமாக அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தின் மூலஸ்தானப்பிற்பகுதி எதுவித சேதத்துக்கும் உள்ளாகவில்லை.

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய தேவஸ்தானத்திற்கும், புங்குடுதீவு கண்ணகி அம்பாள கோவிலுக்கும் புயலினல் சேதம் ஏற்பட்டுள்ளது.

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், சின்னமடு மாதா ஆலயம் என்பனவற்றிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

---

## ஹிந்து மகாசபை கோரிக்கை

புதுடில்லி, டிச. 29

பகைநாகர்கள் விஷயத்தில் அரசாங்கம் வன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும் என அகில இந்திய ஹிந்துமகா சபா கோரியிருக்கிறது. நாகா அமைதிக் குழுவை உடன் கலைக்குமாறும், வெளிநாட்டிலாகாவிலிருந்து உள்நாட்டிலாகாவுக்கு மாற்றுமாறும் அது அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

## மூதூர் தொகுதி அபேட்சகர்கள்

### தமிழரசுக்கட்சிவிரைவில் முடிவு செய்யும்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் 3 பெரியகூட்டங்களை தேர்தல்கிய மனதினத்திற்குமுன்னுல் நடத்துவதென தமிழரசுக்கட்சி முடிவு செய்துள்ளது.

அடுத்த தாகம் 7, 8, 9-ம்திகதிகளில் மூன்று தொகுதிகளில் தமிழரசுக்கட்சி பொதுக் கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்துள்ளது. 7-ம் திகதி உடுப்பிட்டியிலும், 8-ம் திகதி சாவகச்சேரியிலும், 9-ம் திகதி யாழ்ப்பாணத்திலும் தமிழரசுக்கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டங்கள் நடத்தப்படவிருக்கின்றன.

அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்களாகப் போட்டியிடுபவர்களுக்கு போட்டியிடுவது பற்றிய அறிவிப்பு இன்று உத்தியோகபூர்வமாக அனுப்பப்படவிருக்கின்றது. வவுனியா, மூதூர் இரண்டு தொகுதிகளையும் தவிர ஏனைய தொகுதிகளுக்கு முன்னர் கட்சியினுல் அறிவிக்கப்பட்ட அபேட்சகர்களே போட்டியிடுவர். கிளிநொச்சித் தொகுதியில் பண்டிதர். கா. பொ. இரத்தினம் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுவார். திரு. எம். திருச்செல்வம் தேர்தலில் போட்டியிடுவதனை அவரது வைத்தியர்கள் அனுமதிக்கவில்லை.

வவுனியாவில் திரு. ஜி. பி. யின் செனெட் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுவாரென இப்போது எதிர்பார்க்கப்பட்டாலும் இறுதி நேரத்தில் வேறு ஒருவர் போட்டியிடக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மூதூரில் இரு அபேட்சகர்களை நிறுத்துவதா இல்லையா என்ற பிரச்னை எழுப்பப்பட்டதனுல்தான் மூதூர் அபேட்சகர் யார் என்பது முடிவு செய்யப்படவில்லை. ஒருவரையே நிறுத்துவதென கட்சி இப்போது முடிவுசெய்துள்ளதனுல் மூதூர் தமிழரசுக் கட்சிக் கிளை நிர்வாகிகளையும், தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களையும் சந்திப்பதற்காக நேற்று கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் மூதூர் சென்றுள்ளார். அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து திரு அ அமிர்தலிங்கம் மூதூரிலிருந்து திரும்பியதும் மூதூர் அபேட்சகர் யார் என்பது அறிவிக்கப்படும்.

---

## அரசாங்க அதிபருக்கு மகஜர்

கோப்பாய், செவ்வாய்

சமீபத்திய புயலினுல் மிக மோசமான நிலையில் இருக்கும் அச்சுவேலி குடியேற்றவாசிகள் தங்களுக்கு நிவாரண உதவி கோரி காரியாதிகாரிக்கும் அரசாங்க அதிபருக்கும் மகஜர்கள் அனுப்பியுள்ளனர்.

---

### புத்திரபாக்கியம்

பெண்களின் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பின்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேதவைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம். 1176

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நாயன்மார்கட்டு (7-ம் வட்டாரம் முனிசிப்பல்) அம்பாள் வீதியில் நாலேமுக்கால் பரப்பு தென்னந்தோட்டம் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. சி. காசிலிங்கம், அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். 1851

---

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் (Temple Road) வீடு கட்டுவதற்கு சிறந்த இரண்டு பரப்பு காணி, புதிய நல்ல தண்ணீர் கிணற்றுடன். விபரம்- இரத்தினசிங்கம்,29-4-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1378

---

### தேவை

சேலைகளுக்கு ரசல்ஸ் (குஞ்சம்) கட்ட நன்கு தெரிந்த பெண்மணிகள் உடன் தேவை, விபரங்கட்கு மின்சாரநிலைய வீதியில் உள்ள விக்னேஸ்வரா பீடவை மாளிகையில் 4-1-65 திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரைக்குள் தெரிந்துகொள்ளலாம். (சகலவித தையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது) க. சண்முகநாதன், புது றேட், காரைநகர். 1875

---

### குத்தகைக்கு

நூறு பரப்பு காணி, வீடு. இரு கிணறுகள் தென்னை முதலியவற்றுடன் மாதகலில் குத்தகைக்கு உண்டு தோட்டக் காணியாகவும் பாவிக்கலாம். விபரங்கட்கு: 476, ஆஸ்பத்திரி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1365

---

### மகாபிரதமர் குருஷேவின் ருஷ்ய ஆட்சிபீடத்துறவு

பிரணவம் சிவசம்பிராச்சியம் புண்ணியப்பசலை பூர்விக ஞானம், சான்றாண்மை மேதை மரியாதை, சத்திய நெறி தியாகவுணர்வு சைவந்தவருகே, சரித்திரப் பிரசித்தியான சாத்வீகமான மேன்ன வெற்றித் துறவு கைகூடும்!!

இவர், கோபாவிலும்-ருஷ்யாவிலும்-உலகிலும் உயிர்க் கருணைக்கான துறவைக் காட்டித்தந்த மகான். பேராசை ஆபாசம் துஷ்டகீச ஆடம்பரச் செயல், சூறாவளிப் பிரளயம் மோதுவதிலும்-மிகக் கொடியதென்று, பிறர் அறிவாரா? ஆசைக் குறும்புகளையும்-பீடங்களையுந் துறந்து ஒரே தமிழ்க் குரலில் போட்டியின்றித் தமிழர் மகாதேசியமாகப் பாராளுமன்றம் செல்லப் புத்தி உண்டா? இது கல்வி அல்லவா?

சன்மார்க்க தவகூடம், கந்தரோடை. 1379

---

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

BAYER

# பொலிடோல் (FOLIDOL)

இறக்குமதி லைசென்ஸ் இல்லாமல் தடைப்பட்டிருக்கிறது.

எங்களால் பொலிடோல் கூடிய விலைக்கு விற்கப்படவில்லை.

விநியோகஸ்தர்கள் பழைய விலையிலும் பார்க்க கூடிய விலைக்கு விற்ருல் எங்களுக்கு உடன் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

# காடெல்லாம் விறகானது; வீடெல்லாம் காடானது!

## மன்னார் தரும் காட்சி

யாழ்ப்பாணம், புதன்

சூறாவளியின் கோரத் தாண்டவத்தினால் பாதிக்கப்பட்ட மன்னார்ப் பகுதி மீண்டும் பழைய நிலையை அடைவதற்கு பல மாதங்களல்ல வருடங்கள் கூட ஆகலாம் என்று அங்குள்ள மக்கள் கருதுகின்றனர். மன்னார்ப்பட்டினத்தை சீர்செய்ய முடியாது புதிதாகத்தான் அமைக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சூறாவளியினால், காடெல்லாம் சில இடங்களில் விறகாகக் காட்சியளிக்கின்றன. அதேபோல் மன்னார், தலைமன்னார் வங்காலை, பேசாலை, முருங்கன் ஆகிய இடங்களில் வீடெல்லாம் காடாகக் காட்சியளித்து எப்படித்தான் மக்கள் உயிர் தப்பினரோ வென திகைக்கச் செய்கிறது.

### தியேட்டர்கள் பெருஞ்சேதம்

சிறுகுடிசைகள் தவிர அநேகமாக ஒவ்வொரு வீடும், உயர்ந்த கட்டிடங்களும் பெருஞ்சேதம் அடைந்துள்ளன. கூரைத் தகடுகளும் ஓடுகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன. தகரத்தால் வேயப்பட்டிருந்த கூரைகள் அப்படியே தூக்கி பலயார் தூரத்துக்கப்பால் வீசப்பட்டு உள்ளன. தகரம், ஓடுகள் விழுந்து சிலர் சிறுகாயமடைந்தனர் ஆலைகள், மோட்டார் கராஜ் ஒன்றினதும் அரிசி ஆலை ஒன்றினதும் கூரை மீதிருந்த தகடுகள் பாய் சுருட்டியதுபோல் சுருட்டி உருட்டி தூக்கி வீசப்பட்டிருக்கிறது. முருங்கனில் உள்ள இரண்டு தியேட்டர்களில் ஒன்று கூரையும் சுவரும் இடிந்து விழுந்து பலத்த சேதமடைந்துள்ளது. மற்றத் தியேட்டரின் கூரையைக் காணவில்லை.

### புயலைவிட கடல் கொந்தளிப்பு

மன்னார் பட்டினத்திலுள்ள தியேட்டரும் சேதமடைந்துள்ளது.

மன்னார் பட்டினத்தில் சூறாவளியுடன் கடல் கொந்தளிப்பும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. சூறாவளி வீசிய சமயத்தில் கடல்கொந்தளித்து பன்னிரண்டு அடி உயரத்துக்கு பட்டினத்துக்குள் தண்ணீர் பாய்ந்ததாகவும் சிறிது நேரத்தில் வற்றி விட்டதாகவும் ஒருவர் தெரிவித்தார்.

கடற்கரையில் நின்ற ஒரு படகைபட்டினத்திலுள்ள பெட்ரோல் நிலையத்தில் பெட்ரோல். நிரப்ப வந்த மோட்டார் கார் போன்று கடல் கொண்டுவந்து விட்டிருக்கிறது தலைமன்னார் கப்பலும் சூறாவளியினால் கரையில் கொண்டு வந்து விடப்பட்டுள்ளது. வீடுகளை இழந்த மக்கள் ஆங்காங்கே பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆடு, மாடு, கோழிகள் பெரும்பாலும் மாண்டுபோயின. மரங்கள் பல அடிபெயர்ந்துவிழ்ந்தும் முறிந்தும் காட்சியளிக்கின்றன. செவ்வாய்க்கிழமை மாலை காற்று வீசத் தொடங்கியதிலிருந்து புதன்கிழமை நண்பகல் காற்று நிற்கும்வரை மன்னார்ப்பகுதி மக்கள் தாங்கள் இனியும் உயிருடன் வாழ்வோமா என்ற நம்பிக்கையே இல்லாதிருந்தனராம். செவ்வாய்க்கிழமை இரவு வீட்டின் கூரை ஓடுகள் ஒவ்வொன்றாகத் தூக்கி வீசப்பட்டது. கட்டிடமே ஓடுவதுபோலிருந்தது. ஏதோ யுத்த விமானம் வருவதுபோலவும் குண்டு வீசுவதுபோலவும் தோன்றியது. நாங்கள் எங்களை மறந்து கடவுளை நினைத்து இரவு முழுவதும் தேவாரம் பாடிக் கொண்டிருந்தோம். விடிந்து சிறிது நேரத்தின் பின்தான் நாமும் உயிர்தப்பிவிட்டோம் என்ற உணர்வு வந்தது" என்று தலைமன்னாரில் ஒரு வீட்டில் சூறாவளியில் அகப்பட்ட ஒரு சிறுவன் கூறினார்.

### போக்குவரத்து திருந்துகிறது

மன்னாருக்கும் தலைமன்னாருக்குமிடையில் பஸ், ரயில்சேவை நடைபெற்றுவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் செல்பவர்கள் தள்ளாடி வரை இப்பொழுது மோட்டார்காரில் செல்லலாம். பின்னர் அங்கிருந்து ஒன்றரை மைல் தூரம் நடந்துசென்று மிகுதி அரைமைல் தூரத்தையும் படகில் கடந்து மன்னார் பட்டினத்தைச் சென்றடையலாம். சிறுநாவற்குளச் சந்தியிலிருந்து வங்காலை வீதிவழியாகத் தான் தள்ளாடிக்குச் செல்லவேண்டும், மன்னார் பாலம் ஐந்து இடங்களில் உடைந்துள்ளது. ரயில் பாதைகள் கடல் அலையாலும் காற்றினாலும் இடம்பெயர்ந்துள்ளன

### ரயில்சேவை

ரயில் பாதையைத் திருத்தி விரைவில் மீண்டும் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான வேலைகள் துரிதமாக


‘ஈழநாடு’

தினக்குறிப்பு

1965

விற்பனையாகின்றது

விலை ரூபா 1-50.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மாண்டவர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீன்பிடித் தொழிலுக்கும் உணவுப் பயிர்களுக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் அரசாங்கத்துக்கு அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா விபரமாகத் தெரிவித்துள்ளார். நூறு மீனவர்களின் மரணம் மீன்பிடித் தொழிலில் ஒரு சந்ததியினரையே இழக்கச்செய்துவிட்டதென்றும் நாட்டின் மீன் தேவையில் முப்பது சதவிகிதமான மீனைத்தரும் யாழ்ப்பாணத்து மீன்பிடித் தொழிலைப் பெரிதாகப் பாதித்துள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். மீனவர்களின் இழப்பினாலும் வெங்காயப் பயிர் அழிவினாலும் இனி மீன் வெங்காயம் ஆகியவைகளை அதிகமாக இறக்குமதி செய்ய வேண்டியிருக்குமென்றும் இது அந்நிய செலாவணிக்கஷ்டத்தை ஏற்படுத்துமென்றும் அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்

### உணவுக்கஷ்டம் இல்லை

சரியான இணை புத திட்டத்தின் கீழ் நிவாரண உதவி வேலைகள் நடைபெற்று வருவதாகவும் வீடுவாசல்களை இழந்தவர்கள் அனைவருக்கும் வீடு கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டு விட்டதாகவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எவரும் உணவு இல்லாமல் இருக்கவில்லையென்றும் வீதிகள் யாவும் போக்குவரத்துக்குத் திருத்தப்பட்டு விட்டதென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார் காணாமல் போன மீனவர்களைத் தேடுவதற்கான கடற்படை விமானப் படை கோஷ்டியினரின் வேலைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### உதவிகள் குவிகின்றன

தென்னிலங்கையிலிருந்து அளவுக்கதிகமான உதவிகள் கிடைத்து வருவதால் உணவுப் பொருட்கள் வீணாகாமல் தடுப்பதற்காக உதவி செய்ய விரும்பும் ஸ்தாபனங்கள் தம்முடன் முதலில் தொடர்பு கொள்ள வேண்டுமென சமூக சேவை இலாகா அதிபரையும் கொழும்பு அரசாங்க அதிபரையும் திரு ஜயவீரா கேட்டுக்கொண்டுள்ளார்.

நடைபெற்றுவருகின்றன. இதில் முந்நூற்றுக்கதிகமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் ரயில் பாதைகளைத் திருத்தி சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வேலைகளை ரயில்வே பிரதம என்ஜினியர் திரு வைத்திலிங்கம் மன்னாரில் தங்கி தாமே நேரில் கவனித்து வருகிறார். ஒரு வாரத்திற்குள் ரயில் சேவை ஆரம்பமாகி விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னாரில் உணவுக்கஷ்டமே அதிகம். ஒரு ருத்தல் பாண் 80 சதமாக விற்கிறது. சீனி, மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு. தள்ளாடிச்சந்தியிலேயே ஒரு ருத்தல் பாண் 60 சதம்! ஒரு போத்தல் சோடா 1-25 சதம்.

## நிதி மந்திரிக்கு

### தொழிற் சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள அரசாங்க ஊழியருக்கு மூன்று மாத சம்பள முற்பணம் உடனடியாக வழங்குமாறு தொழிற் சங்கங்கள் நிதிமந்திரியைக் கேட்டுள்ளன.

## பசிபிக்கிற்கு அணுசக்தி நீர்மூழ்கி

வாஷிங்டன், டிச. 29

மற்றோர் அமெரிக்க அணுசக்தி நீர்மூழ்கி ஒன்று பசிபிக்கிற்கு அனுப்பப்படவிருக்கிறது. தற்போது அது அமெரிக்க மேற்கு கரையில் இறுதி சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது.

## கிராம சேவகர்கள் நிவாரண நிதி

யாழ்ப்பாணம், புதன்

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்குமுகமாக யாழ்ப்பாணப் பகுதி காரியாதிகாரி திரு எஸ் சிவஞானம் தலைமையில் அவரின்கீழ் சேவை புரியும் 13 கிராம சேவையாளர்களும் சூறாவளி கஷ்ட நிவாரண நிதி பொன்றை ஏற்படுத்தி, நிதி சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

## சூறாவளி அறிகுறி முன்பே தெரியும்?

கொழும்பு, செவ்வாய்

சென்ற செவ்வாய்க்கிழமை சூறாவளி இலங்கையின் பக்கமாக வீசத் தொடங்கியதற்கு பல மணிநேரத்துக்கு முன்பே இலங்கை வானிலை அவதான நிலையம் இதுபற்றிய அறிகுறிகளை அறிந்து வைத்திருந்தது.

இதுபற்றி இப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் சூறாவளி சம்பந்தமாக அமெரிக்க செயற்கைகிரக சைகைகளைக் கூட எமது பகுதி அறிந்து கொண்டிருந்தது. ஆனால் இவையெல்லாம் எந்த விதத்திலும் எமக்கு உதவியளிக்கவில்லை. சூறாவளி 100 தொடக்கம் 150 மைல் வேகத்தில் வீசியது. ஆனால் இவ்விதப் பெரும் சூறாவளி வீசுமென நாம் எதிர்பார்த்திருக்கவில்லை எனக் கூறினார்.

அமெரிக்க செயற்கைதகவல் கிரகம் புயல் சம்பந்தமான எச்சரிக்கையை இலங்கையில் சூறாவளி வீசுவதற்கு 36 மணி நேரத்துக்கு முன்னதாகவே விடுத்திருந்ததென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வானிலை அவதானப் பகுதி அதிகாரியொருவர் இதுபற்றி தெரிவிக்கையில் போதுமான எச்சரிக்கை பொலிஸ் தலைமை காரியாலயத்துக்கு கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

## வானிலை அவதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புகாரைத் தொடர்ந்தே அரசாங்கம் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வானிலை அவதானப்பகுதி டைரக்டருக்கு திரு. எஸ். ஜே. வி. அனுப்பி வைத்த கடிதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தையும் சுற்றுப்புறங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் சூறாவளிக்குப் பலியாகியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இம்மாதம் 21-ம் திகதி இரவு இந்திய வானொலி புயல் பற்றிய எச்சரிக்கையை விடுத்திருந்ததாக அறியப்படுகிறது. ஆனால் உங்களது இலாகா மறுநாள் பகல் 11 மணிக்கே இவ்வித அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இந்த தாமதித்த அறிவித்தல் கூட பொலிஸ் நிலையங்களுக்கு தந்தி மூலம்தான் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## குவைத் பிரதமர் ராஜினாமா

லண்டன், டிச. 29

குவைத் நாட்டின் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான ஷேக் சபா அல் சலீம் அல் சபா தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவரது மந்திரி சபையைப் பார்லிமெண்டின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஆதரிக்காததே பிரதமர் ராஜினாமாவுக்குக் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இளவரசர் ஷேக் சபா அல் சலீம் அல் சபா கடந்த 6ந் திகதிதான் தமது மந்திரி சபையை அமைத்தார்.

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர் பகுதி

### கல்வி பொதுத் தராதர ‘உயர்நிலைப்’பரீட்சை வகுப்புகள்

1965-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடாத்தப்பெறும் கல்விப் பொதுத்தராதர ‘உயர்நிலை’ பரீட்சைக்குரிய இரண்டாம் ஆண்டு மாணவர் வகுப்புகளும், விசேட ஒரு வருட வகுப்புகளும், கலைப்பகுதி விஞ்ஞானப்பகுதி இரண்டிலும் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும்

மேற்படி வகுப்புகளில் சேர விரும்புவோர் விலாசமிட்டு முத்திரை ஒட்டிய ‘நீண்ட கவரை’ அனுப்பி மனுப்பத்திர படிவமும் கல்லூரி விபரப் பிரகடனமும் பெற்றுக்கொள்ளலாம்.

2-1-1965க்குப்பிந்தாமல்மனுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1966-ம் ஆண்டில் நடாத்தப்பெறும் மேற்படி பரீட்சைக்குரிய வகுப்புகள் 1965-ம் ஆண்டு மே மாதம் ஆரம்பமாகும்.

பதிவாளர்.

வட்டுக்கோட்டை, 1229

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி 190-ம் இலக்க வீடு (பெருமாள் கோவிலடி) 2 பரப்பு காணியுடன் விற்பனைக்குள்ளது. விவரங்களுக்கு நித்தியானந்தன், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் 1380

## சூறாவளியினால் கண் இழந்தனர்

கொழும்பு, செவ்வாய்

சூறாவளியினால் சுமார் 50 பேர் தமது கண்பார்வையை முற்றாக இழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு வாரத்துக்கு இலவச ரேஷன்

யாழ்ப்பாணம், செவ்.

வவனியா அரசாங்க அதிபரும் மற்றும் உதவி ஆணையாளரும், காரியாதிகாரிகளும் அடுத்த நான்கு நாட்களாக புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்று மீட்டல் வேலைகளிலும் அவசர நிவாரணம் கொடுக்க வேண்டிய வேலைகளிலும் ஈடுபட்டனர். பொது மராமத்து இலாகா, நீர்ப்பாசன இலாகா, மாவட்டக் காணி அதிகாரி உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி முதலியோர் ஒன்று சேர்ந்து சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களைத் தொடர்ந்து செய்த உதவிகளுக்கு வவனியா முன்னாள் எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பாராட்டுத் தெரிவித்தார்.

பிரதான வீதிகளில்மரங்கள் வீழ்ந்து போக்குவரத்தை தடைசெய்ததினால் ‘ஜீப்’வண்டிகள் வயல்கள் ஊடாகவும் வேறு வழிகளாலும் செல்ல வேண்டியிருந்தன.

புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்துக்கு இலவச அரிசி வழங்கப்படுகின்றது. தற்பொழுது வவனியாப் பகுதிக்கு கூரைகளை வேய்வதற்கு தென்னங்கிடுகுகள் வேண்டும் என்பதை திரு. ரி. சிவசிதம்பரம் வற்புறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம், புதன்

உணவுப்பகுதியினரால் வாங்கிய நெல்லும் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் விவசாயப்பகுதியினரால் வாங்கிவைத்திருந்த நெல்லும் புயற்காற்றினால் பழுதடைந்துள்ளன. இதுபற்றி திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், மன்னார் முதலிய இடங்களிலிருந்து விரிவான புள்ளிவிபரம் அனுப்பிவைக்குமாறு விவசாயப்பகுதியினர் கேட்கப்பட்டுள்ளனர்.